செ.வெ.எண்-55 நாள்-21.03.2020

# அரியலூர் மாவட்டம்
# அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் கொரோனா வைரஸ் தொடர்பாக விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பேருந்து நிலையம் மற்றும் நியாவிலைக்கடைகளில் நகராட்சி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை சார்பில் கொரோனா வைரஸ் காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கிருமி நாசினி தெளிக்கப்படும் பணிகளையும், பொதுமக்கள் சுத்தமாக கைகளை வைத்துக்கொள்ளவதற்கு அமைக்கப்பட்டுள்ள கைக்கழுவும் இடத்தினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் பார்வையிட்டார்கள்.

**இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

கொரோனா வைரஸ் நோய் உலக அளவில் பொது சுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில் உலக சுகாதார நிறுவனம் இதனை தற்போது உலகளாவிய நோய் தொற்றாக அறிவித்துள்ளது. இந்திய அளவிலும் தமிழகத்திலும் பல்வேறு அவசர கால நடவடிக்கையின் அடிப்படையில் நோய் தொற்று பறவா வண்ணம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் செல்வதை தவிர்க்க வேண்டும். ஒருவருக்கொருவர் 1 மீட்டர் இடைவெளி விட்டு இருக்க வேண்டும். தும்மல், இருமல் வரும்போது தனியாக சென்று கர்சிப்புகள் மூலம் முகத்தை மூடி இரும்ம வேண்டும். தேவையில்லாமல் கைகளை வாய், மூக்கு, கண்களில் வைக்க வேண்டாம். ஆன்லைனில் பொருட்கள் வாங்கும்போது மிகவும் கவவம் தேவை. எங்கிருந்து என்ன பொருட்கள் வாங்குகிறோம் என்பதில் கூடுதல் கவனம் தேவை. குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்ட இடங்களில் நெருக்கமாக பொதுமக்கள் இருப்பதை தவிர்க்க வேண்டும். 5 நபர்களுக்கு மேல் பொது இடங்களில் கூடுவதை தவிர்க்க வேண்டும்.

மேலும், ஜெயங்கொண்டம் பேருந்துநிலையத்திற்கு வரும் அனைத்து பேருந்துகளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது. பேருந்துகளில் பயணம் செய்பவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் எனவும், பேருந்துகள் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளதா எனவும் கண்காணிக்க குழு அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், பயணிகள் தங்களது கைகளை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு கைக்கழுவும் இடம் மற்றும் அனைத்து வசதிகளும் பேருந்து நிலையங்களில் செய்யப்பட்டுள்ளது. பேருந்து ஓட்டுநர்கள், நடத்துநர்களுக்கு கைக்கழுவுதல் குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து, அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து நியாயவிலைக்கடைகளில் கொரோனா வைரஸ் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொருட்கள் வாங்குபவர்கள் நெறுக்கமாக நிற்காமல் 2 அடி இடைவெளி விட்டு நின்று பொருட்கள் வாங்க கோடிட்டு வரிசையக நிற்க உரிய ஏற்பாடுகள் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. விற்பனையாளர் விற்பனை நேரங்களில் முகமூடி அணிந்து பாதுகாப்பாக விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. நியாயவிலைக்கடைகளுக்கு வரும் பொதுமக்கள் கைகளை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு தண்ணீர் வசதி மற்றும் சோப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் கொரோனா வைரஸ் தொடர்பான ஆலோசனைகளுக்கு அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறைக்கு 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், 04329 - 228709 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். மேலும், பொதுமக்கள் அனைவரும் தங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொண்டு இந்த தொற்று பரவாமல் தடுக்க மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், கோட்டாட்சியர் பூங்கோதை, நகராட்சி ஆணையர் அறச்செல்வி, வட்டாட்சியர் கலைவாணன், மேற்பார்வையாளர் ராமகிருஷ்ணன் மற்றும் மருத்துவர்கள், சுகாதார ஆய்வாளர்கள், துய்மை பணியாளர்கள், அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**